# எல்லா மாநிலங்களையும் ஒன்றியம் அசைத்துப் பார்க்கிறது! எங்கள் முதல்வரோ, தமது கொள்கையால் ஒன்றியத்தையே அசைத்துப் பார்க்கிறார்!

## பேரவையில் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பதிலுரை!

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்களில் தமிழ்நாட்டில்தான் பெண் I.A.S. அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் தமிழ்நாட்டினுடைய மொத்த I.A.S. அதிகாரிகளுடைய பதவிகளின் எண்ணிக்கை 341 ஆகும். இதிலே, பெண் I.A.S. அதிகாரிகளுடைய எண்ணிக்கை 110 உள்ளனர், ஆண் I.A.S. அதிகாரிகளின் எண்ணிக்கை 231 ஆகும். ஆக, இந்த எண்ணிக்கை அதிகரித்திருப்பதற்கு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. இதற்குக் காரணம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 1989ல் பெண்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீட்டை, வேலைவாய்ப்பிலே உருவாக்கித் தந்ததனால் கிடைத்த வெற்றி என்பதை நான் உங்களுக்குக்தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேமாதிரி, இன்றைக்கு,

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்**
**கெழுமையும் ஏமாப் புடைத்து"**

என்று வள்ளுவன் சொல்லியிருக்கிறார்.

ஒருவர் தான் கற்ற கல்வி தொடர்ந்து ஏழு பிறவிகளுக்கு எடுத்துச் செல்லும் என்று வள்ளுவன் சொல்லியிருக்கிறார். இந்த இட ஒதுக்கீடுபற்றி நாம் பேசுகின்றபொழுது, 1885ல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலம். அப்போது, நெல்லூர் ஆட்சித் தலைவராக இருக்கின்றவர், அந்த பல்வேறு திட்டங்களை அந்த மாவட்டத்தினுடைய அரசு அலுவலகங்களுக்கு செயல்படுத்துகிறார். அப்படி செயல்படுத்துகின்றபொழுது, கீழே எந்தத் திட்டமும் போய்ச் சேரவில்லை. அப்பொழுது அந்த ஆட்சித் தலைவர் அன்றைக்கு நேரடியாகச் சென்று அந்த ஆய்வினை மேற்கொள்கிறார். அங்கே ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 37 பேர் அரசுப் பதவிகளில் இருக்கின்றார்கள். மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பே வழங்கப்படாத சூழ்நிலையால், அங்கே இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டது என்பதை உணர்ந்திருக்கிறார்,

அந்த நெல்லூர் ஆட்சியர் அவர்கள். அதனுடைய தொடக்கமாகத்தான் இன்றைக்கு நாம் இட ஒதுக்கீட்டைப் பெற்றிருக்கிறோம். இட ஒதுக்கீடு என்றால், சாதாரணமாக கிடைத்துவிட வில்லை. நான் குறிப்பிட்டு சொன்னதுபோல,

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்**
**கெழுமையும் ஏமாப் புடைத்து"**

என்ற அந்த அடிப்படையில் கல்வி என்ற இடத்தில், சமூக நீதியை நாம் பொருத்திப் பார்ப்போம். இட ஒதுக்கீட்டை பொருத்திப் பார்ப்போம் என்றால், இன்றைக்கு நாம் இந்த தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டை நாம் பயன்படுத்துகிறோம் என்றால், அத்தனை திட்டங்களையும் வகுத்துக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். அப்படிப்பட்ட இந்த இட ஒதுக்கீட்டை நாம் யாரிடத்திலும், எங்கேயும் கையேந்தி நிற்கக்கூடிய நிலை வரக்கூடாது. நாம் எல்லோருக்கும் இந்த இட ஒதுக்கீட்டை வழங்குகின்ற வாய்ப்பை வழங்கியிருக்கிறோம். அன்றைக்கு நமது பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகர் பேசினார், 1989 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், கல்விக்கான கட்டணத்தை எங்களுக்கு ரூ.2 எனக் குறைத்துத் தந்தார்.

முதல் வகுப்பிலிருந்து முதுகலை வகுப்பு வரை கட்டணமில்லாத கல்வியைத் தந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் அவர் பயன்பெற்றார் என்றால், அதே திட்டத்தினால், நான் 1989 ஆம் ஆண்டு இளங்கலை படிப்புப் பயில புதுக்கோட்டையிலுள்ள மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரிக்கு சென்றபோது, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த எனக்கும் 5 ரூபாய் கட்டணத்தில் கல்வி தந்ததால், நானும், அவரும் இந்த சட்டமன்றத்தில் அமர்ந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலும் பலகோடி பேர் உயர் கல்வி பெற்று உயர்ந்திருக்கிறார்கள். ஆக, தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்த இட ஒதுக்கீட்டை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் இன்றைக்குப் பாதுகாத்து வருகிறார். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்தியா முழுவதும் இருக்கின்ற மாணவர்களுக்கு சட்டப் போராட்டம் நடத்தி, மருத்துவ உயர் கல்விப் பிரிவில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த சமூக நீதித் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஆக, கலைஞர் காலம், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் காலம், இந்த இட ஒதுக்கீடு, தமிழ்நாட்டின் உரிமையை, சமத்துவம் என அத்தனையையும் பாதுகாக்கக் கூடிய அடுத்த தலைமுறைத் தலைவரும் கிடைத்திருக்கிறார்; தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை நமக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருதுகிறேன். அந்த அடிப்படையில், அப்துல் காதர் என்றொரு கவிஞர்,

தமிழ்நாட்டில் பத்து கோடி தமிழர்கள் இருக்கிறோம்;

எங்கள் ஒவ்வொருவரது ஒரு பிடி ஆயுளை எடுத்துக் கொள்ளுங்கள்;

நீங்கள் பல்லாண்டு வாழ வேண்டும்!
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே,

நீங்கள் பல்லாண்டு வாழ வேண்டும்!
தமிழ்நாட்டை நீங்களே ஆள வேண்டும்!

என்று சொல்லியிருக்கிறார். அந்தக் கவிஞனுடைய வரியை மேற்கோள் காட்டி, நானும் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**அறிவிப்புகள்**

**1.பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி விடுதிகளை கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்துதல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் இயங்கும் 12 பள்ளி விடுதிகள் ரூபாய் 4 கோடியே 15 இலட்சத்து 16 ஆயிரம் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் விடுதிகளில், கல்லூரி மாணவ, மாணவியர் நலன் கருதி, குறைவான மாணவர் சேர்க்கை உள்ள 12 பள்ளி விடுதிகள் ரூபாய் 4 கோடியே 15 இலட்சத்து 16 ஆயிரம் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும்.

**2. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 7 கல்லூரி மாணவியர் விடுதி களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்**

7 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியரின் நலன் கருதி, வாடகைக் கட்டடங்களில் இயங்கும் பின்வரும் 7 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு ரூபாய் 47 கோடியே 84 இலட்சம் செலவில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

i) பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, சேதுராப்பட்டி, திருச்சி மாவட்டம்.

ii) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, காரிமங்கலம், தருமபுரி மாவட்டம்.

iii) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, கறம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

iv) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

v) சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, கடலாடி, இராமநாதபுரம் மாவட்டம்.

vi) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.

vii) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல் மாவட்டம்.

**4.புதிதாக 5 கல்லூரி மாணவியர் விடுதிகள் துவங்குதல்**

5 புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள் தொடங்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத் தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியரின் நலன் கருதி, 400 மாணவியர் பயன்பெறும் வகையில், பின்வரும் இடங்களில் 5 புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள் ரூபாய் 3 கோடி செலவில் துவங்கப்படும்.

i) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, கீழாத்தூர், ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம்

ii) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம்

iii) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, பாவந்தூர், கள்ளக்குறிச்சி மாவட்டம்

iv) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்

v) பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்

**4. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகளுக்கு சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்**

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகளுக்கு சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் ரூபாய் 30 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**5.பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்**

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு, 12 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட் டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூபாய் 2 கோடியே 81 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

**6. 37 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் மாணவ, மாணவியர் எண்ணிக்கையினை உயர்த்துதல்**

ஒவ்வோராண்டும் கல்லூரி விடுதிகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே வருவதால், மாணவ, மாணவியர்களின் நலன் கருதி, ரூபாய் ஒரு கோடியே 46 ஆயிரம் செலவில் 37 கல்லூரி விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியரின் எண்ணிக்கை தேவைக்கேற்ப உயர்த்தப்படும். இதனால், கூடுதலாக 885 மாணவ, மாணவியர் பயனடைவர்.

**7.விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவியர் களுக்கு**

20252026 ஆம் கல்வியாண்டு முதல் வரவேற்பு தொகுப்பு (Welcome Kit) வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதி களில் தங்கி கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு வரவேற்பு தொகுப்பு (Welcome Kit) ரூபாய் 16 கோடியே 24 இலட்சத்து 68 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

**8. அரசால் அங்கீகரிக்கப்பட்ட 15 தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவு மானியத் தொகையினை உயர்த்தி வழங்குதல்**

அரசால் அங்கீகரிக்கப்பட்ட 15 தனியார் விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதாந்திர உணவு மானியத்தை இத்துறையின்கீழ் செயல்படும் பள்ளி விடுதிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவுக் கட்டணத்தைப் போன்றே ரூ.1,000/லிருந்து ரூ.1,400/ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூபாய் 45 இலட்சத்து 60 ஆயிரம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**9. 318 கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளில் இன்வெர்ட்டர் (Inverter), குளிர்சாதனப்பெட்டி (Refrigerator), தண்ணீர் சுத்திகரிப்புக் கருவி (RO Water System) வழங்குதல்**

318 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் மாணவ, மாணவியர் பயன்பாட்டிற்காக ரூபாய் 8 கோடியே 69 இலட்சத்து 41 ஆயிரம் செலவில் இன்வெர்ட்டர் (Inverter), குளிர்சாதனப்பெட்டி (Refrigerator) மற்றும் தண்ணீர் சுத்திகரிப்புக் கருவி (RO Water System) வழங்கப்படும்.

**10. நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ள விடுதி மாணாக்கர்களுக்கு இரண்டு அடுக்கு தேக்கு மரக்கட்டில்கள் TANSI நிறுவனம்மூலம் வழங்குதல்**

நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ள விடுதி மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக 200 எண்ணிக்கையிலான இரண்டு அடுக்கு தேக்கு மரக்கட்டில்கள் TANSI நிறுவனத்தின்மூலம் ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**11. கல்லூரி விடுதிகளில் தங்கி மூன்றாம் ஆண்டு கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு செயற்கை நுண்ணறிவு (Gen AI Artificial Intelligence) தொடர்பான பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் வழங்குதல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலக் கல்லூரி விடுதிகளில் தங்கி மூன்றாம் ஆண்டு கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு செயற்கை நுண்ணறிவு (Gen AIArtificial Intelligence) தொடர்பான அடிப்படைப் பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் அளிக்கப்படும்.

**12. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர்களின் சுயபாதுகாப்பு மற்றும் தன்னம்பிக்கையினை ஊக்கப்படுத்தும் வகையில் தற்காப்புக் கலையில் அடிப்படைப் பயிற்சி கலை மற்றும் பண்பாட்டுத் துறை மற்றும் மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்மூலம் வழங்குதல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் இயங்கும் 511 பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவியரின் சுய பாதுகாப்பு மற்றும் தன்னம்பிக்கையினை ஊக்கப்படுத்தும் வகையில், தற்காப்புக் கலையில் அடிப்படை பயிற்சி 4 மாதங்களுக்கு ரூபாய் 2 கோடியே 31 இலட்சத்து 87 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

**13. கல்வி உதவித் தொகை திட்டம் மற்றும் விடுதி மேலாண்மை தகவல் அமைப்பினை செயல்படுத்த திட்டக் கண்காணிப்புப் பிரிவு (Project Monitoring Unit) அமைத்தல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை திட்டங்கள்/விடுதி மேலாண்மை தகவல் அமைப்பை செயல்படுத்த, பிற்படுத்தப் பட்டோர் நல இயக்குநரகம் மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரகம் ஆகியவற்றில் திட்டக் கண்காணிப்புப் பிரிவு (Project Monitoring Unit) ஒன்று அமைக்கப்படும்.

**14. வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் உயர் கல்வியை மேற்கொள்வதற்காக டாப்செட்கோமூலம் கடனுதவி வழங்குதல்**

புதுதில்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் கல்விக் கடனுக்கான வழிகாட்டுதல்களின் அடிப்படையில், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் முதுகலை மருத்துவம், பல் மருத்துவம், பொறியியல் படிப்புகள், பி.எச்.டி., முதுகலைப் பட்டப் படிப்புகள் மேற்கொள்வதற்காக தகுதியுள்ள மாணவ, மாணவியருக்கு கல்வி கடன் வரம்பு ரூ.15,00,000/ல் பயனாளிகளின் பங்களிப்பான 15% அதாவது ரூ.2.25 இலட்சம் வீதம் 100 பிற்படுத்த ப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு டாப்செட்கோ நிதியிலிருந்து கடனாக வழங்கப்படும். இதற்கான செலவினத் தொகை ரூ.2.25 கோடி டாப்செட்கோவிற்கு திரும்ப அளிக்கும்பொருட்டு அரசால் சுழல் நிதி வழங்கப்படும்.

**15. மிகப்பிற்படுத்தபட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்திற்கு தடையில்லா மின்சாதனங்களும் (UPS) மற்றும் கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு இன்வெர்ட்டர் வசதியும் ஏற்படுத்துதல்**

மிகப்பிற்படுத்தபட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்திற்கு ரூபாய் ஒரு இலட்சத்து நான்காயிரம் செலவில் 20 தடையில்லா மின்சாதனங்களும் (UPS), மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கிவரும் 40 கள்ளர் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 20 உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் கல்வி நலனைக் கருத்திற்கொண்டு, ஒரு பள்ளிக்கு தலா ஒரு இன்வெர்ட்டர் வீதம் மொத்தம் 60 இன்வெர்ட்டர் கருவிகள் ரூபாய் 24 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

**16. கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கண்காணிப்புக் கேமராக்கள் (CCTV Camera) பொருத்துதல்**

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கி வரும் 20 கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 40 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் பாதுகாப்பு நலன் கருதி 60 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூபாய் 75 இலட்சம் செலவில் கண்காணிப்புக் கேமராக்கள் (CCTV Camera) பொருத்தப்படும்.

**17. கிராமப்புற மற்றும் நகர்புறங்களில் சலவைத் தொழிலில் ஈடுபட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களுக்கு கரியால் இயங்கும் பித்தளைத் தேய்ப்புப் பெட்டிகள் மற்றும் LPG மூலம் இயங்கும் தேய்ப்புப் பெட்டிகள் வழங்குதல்**

கிராமப்புறங்களில் சலவைத் தொழிலில் ஈடுபட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களுக்கு 600 எண்ணிக்கையிலான கரியால் இயங்கும் பித்தளைத் தேய்ப்புப் பெட்டிகள் மற்றும் நகர்புறங்களுக்கு 600 எண்ணிக்கையிலான திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் தேய்ப்புப் பெட்டிகள் ரூபாய் 88 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

**18. சீர்மரபினர் நல வாரியத்திற்கு நிதி ஒதுக்கீடு உயர்த்தி வழங்குதல்**

சீர்மரபினர் நல வாரியத்தின்மூலம் நல வாரிய உறுப்பினர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குவதற்கு இவ்வாண்டு முதல் வருடத்திற்கு ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**19. சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களுக்கு மூக்குக்கண்ணாடி உதவித் தொகை உயர்த்தி வழங்குதல்**

சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களுக்கு மூக்குக்கண்ணாடி உதவித் தொகை ரூ.500/லிருந்து ரூ.750/ ஆக உயர்த்தி வழங்கப்படும்.

20. தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியத்திற்கு அரசால் வழங்கப்படும் தொடர் மானியம் உயர்த்தி வழங்குதல்

தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியத்தின் நிர்வாக செலவினங்களுக்காக வழங்கப்படும் தொடர் மானியம் ரூபாய் ஒரு கோடியிலிருந்து ரூபாய் இரண்டு கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

இன்றைக்கு உறுப்பினர்கள் 102 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். இங்கே பேசியபொழுதும் பல்வேறு கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். என்னுடைய பதிலுரையிலும், அறிவிப்புகளிலும் அதற்கான பதில்களைத் தந்திருக்கிறேன். விடுபட்டதை மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிறைவேற்றித் தருவேன் என்றும், உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பதிலுரை வழங்கினார்.

**பொறியியல் கல்லூரிகளில், வேளாண்மைக் கல்லூரிகளில், கால்நடைக் கல்லூரிகளில், மீன்வளக் கல்லூரிகளில், சட்டக் கல்லூரிகளில் என்று அனைத்திலும் சேர்ந்து மொத்தம் 40,631 மாணவ மாணவிகள் பயன்பெறுகிறார்கள். அவர்களின் கல்விக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களுக்காகவும் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட தொகை ரூ.911 கோடி என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## 511 விடுதிகளில் உள்ள மாணவிகளுக்கு தற்காப்புப் பயிற்சி! வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 7 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.47.84 கோடியில் சொந்தக் கட்டடங்கள்!


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பி. மதிவாணன்

மே 4 (2023)



இளம்வயதிலேயே தீவிரமாக கழகப் பணியாற்றத் தொடங்கி, கிளைச் செயலாளர், வட்டப் பிரதிநிதி, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட பிரச்சாரக்குழு உறுப்பினர், தொடர்ந்து 25 ஆண்டுகள் செம்பனார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

செம்பனார்கோவில் ஒன்றிய கவுன்சிலராகத்தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்சினை போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு கைதாகியதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, காலில் விலங்கிட்டுக் கடைத் தெருவில் இழுத்து வரப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் ஒரு ஆண்டும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மூன்று மாதம் கடுங்காவல் தண்டனையும் பெற்று சிறைவாசம் அனுபவித்தவர்.

"கழகத்துக்கு இவர் ஆற்றிய பெரும் பணிகளுக்கான அங்கீகாரமாக 'பெரியார் விருது' பெற்றவர். இவரது மறைவு, கழகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். கழக வரலாற்றில் அவர் புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும்" என கழகத் தலைவர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. பரமசிவம்

மே 4 (2020)



கழகம் துவக்கப்பட்ட போதே உறுப்பினராகி, கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் பகுதியில் கிளைச் செயலாளர், ஒன்றிய பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

தனது சொந்த வருமானத்தில் ஒரு பகுதியை எடுத்து வைத்து, இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் அன்று பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம், பேனா, பென்சில் ஆகியவற்றை இலவசமாகக்கொடுத்து வந்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.